**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 246/2017**

PW2 – வடிவேல் த/பெ நடராஜன்
நாள்–24.01.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1,3,4 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

யார் யார்மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் தாவா சொத்தை 1–ம் பிரதிவாதி விற்பனை செய்துவிட்டதாக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி யார் யார் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. தாவா எத்தனை அயிட்ட சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் சுமார் 250 குழி இருக்கும். ஒவ்வொரு அயிட்ட சொத்தின் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் புல வரைபடத்தை பார்த்தால் சொல்ல இயலும். எந்த தாவா சொத்திற்கு வடக்கில் எனக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்றால் தாவா சொத்திற்கு அனைத்திற்கும் வடக்கில் உள்ளது.

எனக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் 144/6 ஆகும். அதன் விஸ்தீரணம் 0.49 ஏர்ஸ் ஆகும். எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் எனது தகப்பனார் எனக்கு எழுதி வைத்துள்ளார். எனது தகப்பனார் எப்போது எனக்கு எழுதி வைத்தார் என்றால் 2011 அல்லது 2012 ஆம் வருடம் ஆகும். நான் எனது கிராமத்தில் பஞ்சாயத்து வார்டு உறுப்பினராக உள்ளேனா என்றால் எனது மனைவி தான் உள்ளார். வாதியும் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை ஆரம்பத்தில் 1–ம் பிரதிவாதிதான் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான்.

வழக்கு சொத்துக்களை 1-ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் 2 முதல் 4 பிரதிவாதிகள் செட்டில்மெண்ட் படி பாத்தியப்பட்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2-ம் பிரதிவாதி 7-ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். கிரயப்படி தாவா சொத்தின் ஒரு பகுதியை 7-ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

தாவா சொத்தில் எத்தனை ஆண்டுகளாக வாதி விவசாயம் செய்து வருவதாக சொல்கிறேன் என்றால் அவரது தகப்பனாருக்குபிறகு வாதி தான் தாவா சொத்தை விவசாயம் செய்து வருகிறார். வாதயின் தகப்பனார் உயிருடன் தான் உள்ளார் என்றால் சரிதான். வாதி தாவா சொத்தின் எந்த எண்ணில் நெல் விதைத்துள்ளார் என்றால் புல எண் 144/7 , புல எண் 144/8 மற்றும் புல எண் 144/9-ல் நெல் விதைத்துள்ளார். என்ன ரகம் நெல் விதைத்துள்ளார் என்றால் சன்ன ரகம் 38 ஆம் நம்பர் ஆகும். தாவா சொத்தில் வாதி நெல் விதைப்பு செய்யவில்லை என்றும் பயிர் காப்பீடும் பெறவில்லை என்றால் சரியல்ல.

வாதி தாவா சொத்தில் எந்த காலத்திலும் விவசாயம் செய்யவில்லை என்றும் நான் பொய்யாக வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பயிர் காப்பீடு செய்துள்ளாரா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது மனைவி வார்டு உறுப்பினராக உள்ளதாலும் வாதியும் வார்டு உறுப்பினர் என்பதால் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.